ஆண்டு பட்டிகை வழக்கு எண்.26/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 26/2025 | LW– 1 | PW– 1 |
| Name | : பழனியப்பன் ( புகார்தாரர்) | | |
| Father's/Husband's Name | : சுப்பையா | | |
| Village | : அண்ணாநகர் | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 59/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of July 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து நகைக்கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 16 ஆண்டுகளாக ஆஜர் எதிரியிடமிருந்து நான் வெள்ளிக் கொலுசுகள் வாங்கி வியாபாரம் செய்து வருகிறேன். இந்நிலையில் கடந்த 20.12.2021ம் தேதி வரை 7 கிலோ 83 கிராம் வெள்ளி பொருட்களை ஆஜர் எதிரியிடமிருந்து நான் வாங்கியிருந்தேன். கடந்த 2021ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து தரம் இல்லாத வெள்ளிப் பொருட்களை ஆஜர் எதிரி எங்களுக்கு கொடுத்திருந்ததால் அந்த பொருட்களை நாங்கள் விற்பனை செய்த நபரிடமிருந்து எங்களுக்கு திரும்பி வந்துவிட்டதால் எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தது. அதனால் அவரிடமிருந்து வெள்ளிப் பொருட்கள் வேண்டாம், நிறுத்திக் கொள்ளுங்கள், நான் வேறு இடத்தில் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லியிருந்தேன். அதனால் கணக்கு பார்த்து முடித்து விடுவதாக சொல்லி

ஆஜர் எதிரி கடந்த 20.12.2021ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் எங்கள் கடைக்கு வந்து கணக்குப் பார்த்தார்.

2. அதன்படி 7 கிலோ 83 கிராம் வெள்ளிப் பொருட்களை நான் அவரிடமிருந்து வாங்கியிருப்பதாக கணக்கு சொன்னதன் பேரில், நான் பல்வேறு தேதிகளில் கடந்த 09.02.2022 வரை 5 கிலோ 577 கிராம் வெள்ளிப் பொருட்களை ஆஜர் எதிரியிடம் திருப்பிக் கொடுத்துவிட்டேன். அதுபோக மீதமுள்ள 1 கிலோ 506 கிராம் பழைய வெள்ளிப் பொருட்களை நான் எதிரிக்கு கொடுக்க வேண்டியிருந்தது. அதன்பிறகு பல்வேறு முறை நான் எதிரிக்கு போன் மூலம் அழைத்தும் அவர் வரவில்லை. அதன்பின்னர் 25.05.2022ம் தேதி காலை 11.30 மணிக்கு எங்கள் கடைக்கு வந்து அவருக்கு தரவேண்டிய மீதமுள்ள பொருட்களை என்னிடம் கேட்டார். அப்போது என் கடையில் வாடிக்கையாளர்கள் இருந்ததால் நான் வியாபாரத்தை முடித்துவிட்டு வெள்ளிப் பொருட்களையும், பணத்தையும் தருகிறேன் என்று அவரை இருக்கச் சொன்னேன்.

3. அதற்கு எதிரி நீ என் கணக்கை முடித்துவிடுவாயாடா, கோத்தா, கொம்மா, தேவிடியா மகனே, உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்டா என்று என்னையும், என் மகனையும் பார்த்து சொன்னார். மேலும் அவர் நாங்கள் அவருக்கு 10 லட்சம் ரூபாய் தர வேண்டும் என்றும், தராவிட்டால் கொலை செய்து விடுவதாகவும், கடையை நடத்த விடமாட்டேன் என்றும் மிரட்டினார். பின்னர் அவர் என் கடைக்குள் அத்துமீறி நுழைந்து என் கடையில் Showcase ல் வைத்திருந்த சுமார் 6 கிலோ எடையுள்ள வெள்ளிக் கொலுசுகளை எடுத்தார். நான் ஏன் இப்படி செய்கிறாய் என்று தடுத்தபோது என்னை அவர் கையால் அடித்து கல்லாப் பெட்டியின் மீது தள்ளிவிட்டார். அதைப் பார்த்த என் மகன் பிரபாகரன் என் அப்பாவை ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு என்

மகனை கையால் அடித்து பூஜை அறையில் தள்ளிவிட்டுவிட்டார். அதன்பிறகு எங்கள் கடையில் இருந்த Showcase மற்றும் கம்ப்யூட்டர் தராசையும் உடைத்து வெள்ளிக் கொலுசுகளை எடுத்துச் சென்றுவிட்டார்.

4. அப்பொழுது என் கடையில் கொலுசுகளின் டிசைன் பார்த்துக் கொண்டிருந்த வாடிக்கையாளர்களான அழகம்மாள், முருகேசன் மற்றும் பூமி ஆகியோர் ஏன் இப்படி செய்கிறீர்கள், எதுவாக இருந்தாலும் பேசிக் கொள்ளலாம் என்று கேட்டதற்கு, அவர்களை டேய் நீ வெளியே போங்க என்று சொல்லி அவர்களது கையில் வைத்திருந்த கொலுசுகளையும் பறித்துக் கொண்டார். அவர் கீழே விழுந்து எழுந்து கூச்சல் போட்ட சத்தம் கேட்டு பக்கத்து கடைக்காரர்களான செல்வராஜும், AJ நகைக்கடைக்காரரும் வந்து எதிரியிடம் கேட்காமல் பொருட்களை அள்ளக்கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தபோது நான் என் மகனை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். அப்போது எதிரி சட்டையைக் கழற்றி போட்டுவிட்டு இருங்கடா, உங்களை நான் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு என் கடையில் எடுத்த கொலுசுகளை கையில் வைத்துக் கொண்டு கடைக்குள் உட்கார்ந்து கொண்டார்.

5. பின்னர் என் மகன் நத்தம் காவல் நிலையத்திலிருந்து மாரியப்பன் என்ற சார்பு ஆய்வாளரை அழைத்து வந்திருந்தார். சார்பு ஆய்வாளர் என் கடையில் வந்து உடைந்து கிடந்த Showcase, தராசு மற்றும் பூஜை அறை ஆகியவற்றை பார்வையிட்டுவிட்டு எதிரியை பார்த்து ஏன் இப்படி செய்தாய் என்று கேட்டு சத்தம் போட்டார். பின்னர் எங்களை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லிவிட்டு சார்பு ஆய்வாளர் சென்றுவிட்டார். பின்னர் நாங்கள் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் பற்றி சொல்லி, கணக்கு கேட்டதன் பேரில் என்னிடம் இருந்த கணக்குகளையும் சார்பு ஆய்வாளரிடம் காண்பித்தேன். ஆஜர் எதிரியிடம் கணக்கு கேட்டதற்கு அவர் மதுரையில் வைத்திருப்பதாகவும், எடுத்து

வருவதாகவும் சொன்னார். அவரிடம் சார்பு ஆய்வாளர் கணக்குகளை எடுத்துக் கொண்டு அன்றைய தினம் மாலையே வருமாறு கூறினார்.

6. பின்னர் நானும், என் மகனும் கடையில் உடைந்திருந்த பொருட்களை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது அன்று மதியம் 2.00 மணியளவில் ஆஜர் எதிரி மீண்டும் எங்கள் கடைக்கு வந்து நீ என் கணக்கை முடித்துவிடுவாயாடா, கோத்தா, கொம்மா, தேவிடியா மகனே, உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்டா என்று அசிங்கமாக பேசி உங்களை கடை நடத்த விடமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு கடையின் வாசற்படியில் ஏறினார். அவர் மீண்டும் கடைக்குள் வந்து கண்ணாடிகள் எதையும் உடைத்துவிடுவார் என்ற பயத்தில் வாசலிலேயே அவரை மறித்து நில்லுப்பா என்று சொன்னேன். அவர் மீண்டும் என்னை கோத்தா, கொம்மா, தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி கையால் அடித்து வாசற்படியில் தள்ளிவிட்டுவிட்டார். அதில் எனது வலது கை தோள்பட்டையில் அடிபட்டு சவ்வு விலகிவிட்டது.

7. அதைப் பார்த்து ஏன் இப்படி செய்தாய் என்று கேட்டுக் கொண்டு வந்த என் மகனை நெஞ்சில் கையால் அடித்து கடைக்குள் தள்ளிவிட்டுவிட்டார். அதனால் என் மகன் உடைந்து கிடந்த Showcase கண்ணாடி துகளில் விழுந்து கையில் ரத்தக் காயம் ஏற்பட்டது. பின்னர் எங்கள் கடையில் இருந்து சென்ற வாடிக்கையாளர்களான அழகம்மாள், பூமி, முருகேசன் ஆகியோர் பக்கத்து கடையில் கொலுசு வாங்கிக் கொண்டு திரும்பி வரும்போது இந்த சம்பவத்தைப் பார்த்து விலக்கிவிட்டார்கள். பின்னர் என் கையில் ஏற்பட்ட காயத்தின் வலி தாங்க முடியாமல் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலையில் வலி அதிகமாக இருந்ததால் நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்ந்து எக்ஸ்ரே எடுத்து சிகிச்சையில் இருந்தபோது என்னை அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பேரில் நான்

திண்டுக்கல் சென்று வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். பின்னர் நான் நாட்டு வைத்தியம் செய்து கொண்டுவிட்டு நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். ஆனால் எதிரியின் மீது நடவடிக்கை எடுக்காமல் காவல்துறையினர் தாமதம் செய்து வந்தார்கள். அதனால் திண்டுக்கல் காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு மனு கொடுத்தேன். அதன்பிறகும் நடவடிக்கை இல்லாததால் சமூகம் நீதிமன்றத்தில் தனி மனு தாக்கல் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் நீதிமன்றத்தில் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் முடித்து வைக்கப்படுகிறது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.07.01 14:09:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்